முனிசிப்பாலிட்டியைப் பொறுத்தவரையில், 30 படுக்கைகள் போடுவதற்கென்று, அதற்கு ஒரு சீலிங் வைத்திருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் எடுத்துக் கொண்டால், எவ்வளவு செலவாகும்? ஒன்றியங்கள் அதற்கு எவ்வளவு கொடுக்கத் தயாராக இருக்கின்றன என்பதை யெல்லாம் நல்ல முறையிலே ஆராய்ந்து, தீர யோசித்து, நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கோவைத்தம்பி அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த உணர்வு, அந்தக் கருத்து நாம் எடுக்கும் முடிவுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, பெருந்துறை சானட்டோரியம் தமிழ் நாட்டிலே ரொம்ப முக்கியமான பெயர்போன சானட்டோரியம். அதற்கு இராமலிங்கம் செட்டியார் போன்ற மில் முதலாளிகள் ஏராளமான பணத்தைக் கொடுத்து, தனியாரால், நல்ல முறையிலே அந்த சானட்டோரியம் நடக்கிறது. அரசாங்கப் பணமும் அதற்கு நிறையக் கொடுக்கப்படுகிறது. அதிலே ஏராளமான நோயாளிகள், அதுவும் ஏழைகளாக இருக்கிற நோயாளிகள், சிபாரிசு இல்லாத நோயாளிகள் போனால் அங்கு படுக்கை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்பொழுது, அது தனியாக, பெரியார் மாவட்டமாகப் போய்விட்டதால், கோவை மாவட்டத்திலே அப்படிப்பட்ட ஒரு சிறந்த காச நோய் மருத்துவ மனையை தனியாகக் கட்டினால் இங்கும் கஷ்டம் தீரும், அங்கும் கஷ்டம் தீரும். அந்த ஆலோசனையை அரசு முன்வைக்குமா? அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்களுக்கே தெரியும், கோயம்புத்தூர் மருத்துவ மனையிலேயிருக்கிற, தனியாக இருக்கிற டி.பி. பிரிவுகளை, இரண்டு பேரும் சேர்ந்துதான் பார்வையிட்டோம். அங்கேயும் இப்பொழுது டி.பி.-க்காக வைத்தியம் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, அதை விரிவு படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கும். ஆனால், இன்னொன்று, புதிதாக டி.பி. சானட்டோரியம் ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். அதை இப்பொழுது நான் கேள்வி நேரத்திலே சொல்வதற்கில்லை. என்றாலுங்கூட, அதையெல்லாம் என்ன என்று எழுதிக் கொடுப்பார்களேயானால் நிச்சயமாக ஆராய்வோம்.

நன்னிலம் அரசு மருத்துவமனை.

* வினா எண் 884.—திரு. நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அரசினர் மருத்துவமனைக்கு வெளி நோயாளிகள் சிகிச்சைக்கூடம் புதிதாக கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

1981 ஏப்ரல் 25] [திரு. நன்னிலம் அ. கலையரசன்]

(ஆ) படுக்கை வசதிகள் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(ஆ) இல்லை.

கூக்கல் துறையிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண் 885.—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி கூக்கல் துறையில் அரசு மருத்துவமனைக்குக் கட்டிடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் கட்டத் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இந்த மருத்துவமனைக்குப் புதிய கட்டிடமும் மற்றும் இம்மருத்துவ மனையில் பணி புரியும் பணியாளர்களுக்காகக் குடியிருப்பும் கட்டுவதற்காக ரூ. 7,30,000 (ரூபாய் ஏழு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) அங்கீகரித்து 10—3—1981 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, இந்த அரசாணையை வெளியிட்டதற்காக மகிழ்ச்சி. அதற்கு நன்றி செலுத்துவதோடு இந்தக் கட்டிடம் கட்ட எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை ஒதுக்கப்பட்டது என்பதையும் இந்த வேலை எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7.30 லட்சம் ரூபாய் என்று சொல்லி இருக்கிறேன். அது Construction of buildings and Staff Quarters இந்த இரண்டுக்குமாக நாம் ஒதுக்கி இருக்கக்கூடிய பணம் Construction of buildings -க்கு மட்டும் ஏறத்தாழ 5 லட்சம் ஆகும். மீதியுள்ள 2.30 லட்சம் அந்த ஸ்டாப்புக்காகப் பயன்படும். அதுமட்டுமல்லாமல், Hill Area Development Scheme என்ற ஸ்கீம் இருக்கிறது. அந்த ஸ்கீம் அடிப்படையில் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இன்னும் என்ன செய்யலாம் என்று ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, ஆஸ்பத்திரிக்கு வேண்டிய கட்டிடங்கள், பணியாளர்களுக்கு இருப்பிடம் தயாரிப்பதோடு அங்கே படுக்கை வசதிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?